# புறநானூற்றில் அறிவியல் சார்ந்த தொழில்கள்

முனைவர் ப.நிர்மலா

உதவிப்பேராசிரியர், அன்னை கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கோவிலாச்சேரி, கும்பகோணம்.

நம் தமிழ் மொழி பல்லாயிரம் ஆண்டுகளுக்கும் முன் இலக்கியம் கண்டது. இவ்விலக்கியத்தில் புலவர்கள் வெறும் கற்பனையும், அழகியலையும் மட்டும் புலப்படுத்தவில்லை.. அதன் சிறப்பினை மேம்படுத்துவதற்கு இலை மறைகாயாக பல அறிவியல் செய்திகளையும் புதைத்துள்ளனர். அவ்வகையில் மனிதர்களின் வீரத்தைப் போற்றும் நூலாக அமைந்தது புறநானூறு. இந்நூலில் காணப்படும் தொழில் சார்ந்த அறிவியல் செய்திகளை ஆராய்ந்து அளிப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**பழந்தமிழரின் அறிவியலை அறியும் முறைகள்:**

பழந்தமிழரின் அறிவியல் வரலாற்றைத் தொகுத்துக் கூறும் முயற்சியில் இராம.சுந்தரம் என்பவர் எழுதிய "தமிழக அறிவியல் வரலாறு" என்ற நூல் குறிப்படத்தக்கது.தஞ்சைப் பல்கலைக்கழகத்தில் தொல் அறிவியல், கல்வெட்டியல் துறையில் மேற்கொள்ளப்பட்டுவரும் ஆய்வுகளும், ஆய்வேடுகளும் தொன்மைசார் அறிவியலை வெளிப்படுத்துவனாக அமைந்துள்ளன.

**உழவுத்தொழில்:**

**"சுழன்றும் ஏர்ப் பின்னது உலகம் அதனால்**

**உழந்தும் உழவே தலை"** (குறள் - 1031)

இவ்வுலகம் எத்தனை தொழில்கள் செய்து சுழன்று வந்தாலும் அத்தொழில்கள் அனைத்திற்கும் முதன்மையானது உழவுத்தொழில். இத்தொழில் கரும்பைப் பிழிந்து சாறு எடுக்கும் இன்றைய நவீன இயந்திர முறையினைப் போல அன்றும் சாறு பிழியும் தொழிலினை,

**"கரும்பினெந்திரஞ் சிலைப் பினயலது"** (புறம் -322)

என்ற பாடலடியினால் அறியமுடிகின்றது.. இது இக்கால சர்க்கரை ஆலைகளின் வளர்ச்சிக்கு அடிப்படைக் கூறாக அக்கால அறிவியல் அறிவு இருந்தமைக்குச் சான்றாகும்.

பண்டையத் தமிழர்கள் உழவுத்தொழிலில் பயன்படுத்தும் அரிவாள் மழுங்கினாள் அதனை சேற்றின் மீது மடிந்து இருக்கும் ஆமையின் வளைந்த முது கோட்டில் உரசித்தீட்டிக் கூர்மைச் செய்து கொண்டனர் என்பதனை,

**"நெல்லரி தொழுவர் கூர்வாள் மழுங்கிற்**

**பின்னை மறந்தோ பரியக்கல் செத்து**

**அள்ளல் யாமைக் கூன்புறத் துரிஞ்சும்"** (புறம்-379)

என்ற பாடலடிகள் இன்றைய நவீன சானைப் பிடிக்கும் கருவி வளர்ச்சிக்கு அடித்தளமாக அமைந்துள்ளது.

**நெசவுத் தொழில்:**

பண்டையத் தமிழர்கள் தழை, பருத்தி, பட்டு கொண்டு தங்கள் ஆடைகளைப் பயன்படுத்தினர். அத்துடன் மிகவும் மெல்லிய ஆடைகளையும், அழகிய வண்ண ஆடைகளையும் நெய்வதில் கைத்தேர்ந்தவர்கள் என்பதனை,

**"போதுவிரி பகன்றைப் புதுமலர் அன்ன**

**அகன்றுமடி கலிங்கம் பாம்பு**

**உரிந்தன்ன வான்புங்கலிங்கம்** (புறம் - 397)

எனும் பாடலடிகள் மலரை ஒத்த பாம்புத் தோல் போன்ற ஆடைகளையும் தமிழர்கள் நெய்திருப்பதைப் புலப்படுத்துகின்றது.

**கட்டிடத் தொழில்:**

ஆதிமனிதர்கள் உண்ண உணவும், உடுக்க உடையும் தேடிக் கொண்டது போன்று தான் வாழ்வதற்கு நல்லதோர் இருப்பிடத்தையும் தேடிக் கொண்டான் என்பதும் உண்மை. தொடக்கத்தில் புல்லாலும், தழையாலும், கூரையாலும் அமைத்து வாழ்ந்ததை,

**"எளியவர் இல்லங்களில் கூரை" (புறம் - 19)**

**"மசிய தழையாலும்" (புறம் - 212)**

என்ற பாடலடிகள் இன்றைய கட்டிடத் தொழிலுக்கு அடித்தளமிட்டுள்ளன.

**"வீயாச் சிறப்பின் வேள்வி முற்றி**

**யூபம் நட்டவியன் களம்பல சொல்" (புறம் - 15)**

எனும் பாடலடிகள் இன்றைய நவீன கட்டுமான முறையிலான தூண்களை எழுப்பிக் கட்டும் முறைக்கு அன்று தூண்களால் அகன்ற வேள்விச் சாலைகள் இருந்தன என்பதை உணர்ததுகின்றது.

**மருத்துவத் தொழில்:**

**"நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்**

**வாய்நாடி வாய்ப்பச் செயல்". (குறள் - 948)**

இக்குறள் நோய் இன்னதென்று அறிந்து பின்பு குணமடைய மருத்துவம் செய்ய வேண்டும் என்பது மருத்துவத்தின் மகத்துவம், இத்தகைய உன்னத மருத்துவத் தொழிலிலும் சிறந்தவர்கள் பழந்தமிழர்கள் என்பதற்கு இந்நூல் சான்றாகும். இதனை,

**"சிறப்பில் சிதடும் உறுப்பில் பிண்டமும் கூனும் குறளும்**

**ஊனமும் செவிடும். மாவும் மருளும்**

**உளப்பட வாழ்நர்கது எண்பேர் எச்சம்" (புறம் - 353)**

என்ற பாடலடிகள் உணர்த்துகின்றன.

**தொழில் நுட்பத்தின் வெளிப்பாடு:**

தொழில்கள் மட்டும் இல்லாமல் அவற்றின் நுட்பமும் இந்நூலில் இருப்பதை உணரலாம். களர் நிலத்தில் ஊறும் உவர்நீரைக் கொண்டு ஆடையின் அழுக்கைப் போக்கும் முறையினை

**"களர்படு கூவல் தோண்டி நாளும்**

**புலைத்தி கழீஇய தூவெள் அறுவை" (புறம் - 311)**

எனும் பாடலடிகள் எடுத்து இயம்புகின்றன. பூந்திக் கொட்டையை நீரிலிட்டு அந்நுரையில் துணிகளை வெழுப்பதும், இரும்புப் பொருள்கள் துரும்பிடிக்காமலிருக்க நெய்யிடப்பட்டு பாதுகாத்ததை,

**"கண்டிரணோன் காழ்திருந்தி நெய்யணிந்து**

**கடியுடை வியகை ரவ்வேச யவ்வே" (புறம் - 95)**

மேற்குறிப்பிட்ட தொழில்களோடு,

**"நனிகடல் இருங்குட்டத்து விளிபுடைத்த**

**காம்போல" (புறம் 26)**

கடல் நடுவே நீரினைப் பிரித்துக் காற்றை எதிர்த்துச் செல்லும் மரக்கலத் தொழிலையும்,

**"காய் நெய் லறுத்துக் கவளங் கொளினே**

**மாநிறை வில்லதும் பன்னாட் காகும் (புறம் - 184)**

புறநானூற்றுப் பாடலடிகள் எடுத்துரைக்கின்றன. காய்ந்த நெல்லை அறுத்து நிலத்தை அளக்கும் நில அளவைத் தொழில், வணிகத் தொழில்களும் இந்நூலில் இடம்பெற்றிருப்பது சிறப்பிற்குரியதாகும்.

பழந்தமிழர்கள் உண்ண உணவு, உடுக்க உடை, இருப்பதற்கு வாழிடம் என்று நாள்தோறும் தனது முன்னேற்றத்தை தேடிச் செல்ல தமிழனுக்கு அடிப்படை ஆதாரமாக விளங்குவது தொழில். அத்தகைய தொழிலை சங்க இலக்கியங்களும் அதனை அடியொற்றி எழுந்த இலக்கியங்களும் இன்றைய அறிவியல் வளர்ச்சிக்கு அடித்தளமாக அமைந்துள்ளன.